வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 18.10.2025 நேரம்- மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பாதுகாப்பு தளவாட உற்பத்தி மையமாக இந்தியா மேம்பட்டுள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மின்னணு பொருட்களின் விற்பனை வழக்கத்தை விட அதிகரித்திருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற்ற மக்கள் மன்ற குறை தீர்ப்புக் கூட்டத்தில் காவல் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு பொது மக்களிடம் புகார் மனுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதால், புதுச்சேரி காரைக்கால் பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*ராஜ்நாத் சிங்*

பாதுகாப்பு தளவாட உற்பத்தி மையமாக இந்தியா மேம்பட்டுள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். இன்று அவர் உத்தரபிரதேச மாநிலம் லக்னோவிலுள்ள பிரமோஸ் விண்வெளிப் பிரிவில் தயாரிக்கப்பட்ட முதல் தொகுதி பிரமோஸ் ஏவுகணைகளை அம்மாநில முதலமைச்சர் யோகி

ஆதித்யநாத்துடன் இணைந்து கொடியசைத்து தொடக்கி வைத்து பேசுகையில் இவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறுகையில் நாட்டின் நலனுக்கு எதிரான எந்த ஒரு நடவடிக்கையும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என தெரிவித்தார். லக்னோ பிரமோஸ் பிரிவு ஏவுகணை அமைப்பு, உற்பத்தி முதல் இறுதி சோதனை வரை முழு செயல்முறையையும் உள்நாட்டிலேயே மேற்கொள்ள வழி வகை செய்வது குறிப்பிடத்தக்கது.

*பிரதமர் -வாழ்த்து*

தந்தேரஸ் பண்டிகையை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த நாளில் அனைவருக்கும் மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நல்ல ஆரோக்கியத்திற்காக தாம் பிராத்தனை செய்வதாகவும், அனைத்து குடிமக்களுக்கும் தன்வந்திரி பகவான் ஏராளமான ஆசிர்வாதங்களை வழங்குவார் என்று தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், மத்திய உள்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அனைவரின் வாழ்க்கையிலும் செழிப்பு மற்றும் அதிர்ஷ்டத்திற்காக தன்வந்திரி பகவானிடம் தாம் பிரார்த்தனை செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

*ஜிஎஸ்டி- திருவிழா*

மத்திய அரசின் அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் ஊக்கத்தை அளித்திருப்பதாகவும், பண்டிகை காலத்தில் மின்னணு, ஆட்டோ மொபைல் மற்றும் நுகர்வோர் பொருட்கள் போன்ற முக்கிய துறைகளில் சாதனை விற்பனைக்கு வழி வகுத்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் நடைபெற்ற ஜிஎஸ்டி சீர்திருத்தம் தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த சந்திப்பின் போது வர்த்தக தொழில் துறை

அமைச்சர் திரு பியூஷ்கோயல் மற்றும் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோரும் உடன் இருந்தனர். இதில் கலந்து கொண்ட அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில்,............

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி- திருவிழா-*

(வாய்ஸ்)

நவராத்திரி பண்டிகை காலத்தில் மின்னணு பொருட்களின் விற்பனை 20 முதல் 25 சதவிகிதம் வரை அதிகரித்து உள்ளதாகவும், இத்துறையின் மூலம் 25 லட்சம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைத்துள்ளதையும் அவர் அப்போது சுட்டிக் காட்டினார். நாட்டின் தகவல் தொழில் நுட்ப இணைப்பில் 90 சதவிகிதம் 5-ஜி அலைக்கற்றை கொண்டு வரப்பட்டுள்ளதாக எடுத்துறைத்த அவர் தொலைதூர கிராமப் பகுதிகளிலும் இணையதள சேவையை உறுதி செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

(வாய்ஸ்)

*அமித் ஷா*

பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா 3 நாள் பயணமாக பீகார் மாநிலம் சென்றுள்ளார். பயணத்தின் முதல் கட்டமாக அம்மாநில முதலமைச்சரும் ஐக்கிய ஜனதா தள தலைவருமான திரு நிதிஷ்குமாரை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். அதனைத் தொடர்ந்து லோக் ஜனசக்தி கட்சியின் தலைவர் திரு சீராக் பாஸ்வானை சந்தித்து எதிர்வரும் பீகார் சட்டமன்ற தேர்தல் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தார்.

*ஜிதேந்திர சிங்*

சுவாச நோய் தொற்று, புற்று நோய், மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு உதவும் வகையில் நாபித்ரோ மைசின் என்னும் ஆன்டிபயாடிக் மருந்து உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறி உள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மருத்துவக் கருத்தரங்கை தொடக்கி வைத்துப் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மொபைல் கிளினிக்குகள் கிராமப்புற மற்றும் தொலைதூர பகுதிகளுக்கு சேவையாற்றி வருவதாகவும் கூறினார். இதன் மூலம் ஆரோக்கியமான முறையில் வளர்ந்த நாட்டை நோக்கிய நாட்டின் பயணத்தை மேற்கொள்ளும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

*பீகார்-சட்டமன்ற தேர்தல்*

பீகாரில் 18 மாவட்டங்களை உள்ளடக்கிய 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு முதல் கட்டமாக வரும் 6-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது. மனுக்களை திரும்ப பெற நாளை மறுநாள் கடைசி நாளாகும். அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என இந்திய தேர்தல் ஆணையம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளது. இதனிடையே 20 மாவட்டங்களில் 122 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 15-ஆம் தேதி நடைபெற உள்ள 2-ஆவது இறுதி கட்ட தேர்தலில் இதுவரை 290 பேர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்தனர்.

*மக்கள் மன்றம்*

புதுச்சேரியில் ஒவ்வொரு வார சனிக்கிழமைகளில் அனைத்து காவல் நிலையங்களிலும் மக்கள் மன்றம் எனும் குறை தீர்ப்புக் கூட்டம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நெட்டப்பாக்கம் காவல் நிலையத்தில் இன்று நடைபெற்ற கூட்டத்தில் காவல்துறை துணைத் தலைவர் திரு சத்திய சுந்தரம், கலந்து கொண்டு பொது மக்களிடம் புகார்

மனுக்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டார். இதேபோல் சேதராப்பட்டு காவல்நிலையத்தில் சட்டம்-ஒழுங்கு முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு கலைவாணன் தலைமையிலும், காரைக்காலில் செல்வி லட்சுமி சவுஜன்யா தலைமையிலும் மக்கள் மன்றம் நடைபெற்றது. இன்று நடைபெற்ற கூட்டத்தில் மொத்தம் 38 புகார்கள் பெறப்பட்டதில் 24 புகார்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டது.

*ஜிஎஸ்டி- ஆந்திரப் பிரதேசம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், ஆந்திரப் பிரதேசத்தில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு **செய்தித் தொகுப்பு........**

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி- ஆந்திரப் பிரதேசம்*

**(வாய்ஸ்)**

மத்திய அரசின் அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தம் காரணமாக ஆந்திரப் பிரதேச விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு புதிய ஊக்கம் அளித்துள்ளது. இதன் மூலம் முக்கியத் துறைகளில் வரி விகிதங்கள் குறைந்துள்ளதால் செலவுகளை குறைத்து லாபத்தை மேம்படுத்தும் விதத்தில் அம்மாநில பொருளாதாரம் மேலும் வலுப்பெறும். ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் பாரம்பரிய கைவினை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்படும் என

எதிர்பார்க்கப்படுகிறது. தோல் பொம்மலாட்டம், கோவில் கல்சிறப்பங்கள் போன்ற தயாரிப்புகளுக்கு முன்பு 12 சதவிகிதமாக விதிக்கப்பட்ட வரி தற்போது 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் உள்ளூர் கலை மற்றும் கலாச்சாரம் சார்ந்த தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர். இதுபோல் மாநிலத்தின் மீன் வளத்துறையிலும் வரி விகிதம் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளதால் இத்துறையில் ஈடுபட்டுள்ளோர்களின் பொருளாதாரமும் முன்னேற்றம் காணும் என்பதில் ஐயமில்லை. அதேவேளையில், கடல் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதியையும் வரும் நாட்களில் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. ஆட்டோ மொபைல் துறையில் இதுவரை செயல்பட்டு வந்த 28 சதவிகித ஜிஎஸ்டி வரி தற்போது 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் அம்மாநிலத்தில் வாகனங்கள் வாங்குபவர்களின் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. இந்த சீர்திருத்தங்களால் மாநிலத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதோடு மக்களுக்கு உள்ளடக்கிய நியாயமான சந்தையை உறுதி செய்திருப்பது குறிப்பிடத் தக்கது.

*வானிலை*

தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது அடுத்த 36 மணி நேரத்தில் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும், வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில் தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக இம்மையம் அறிவித்துள்ளது.

*விளையாட்டு*

இந்திய-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில்

நாளை நடைபெற உள்ளது.  இரு அணிகளுக்கு இடையே 3 ஒருநாள் போட்டிகளும், 5 , 20-20 போட்டிகளும் நடைபெற உள்ளன.

டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரை இறுதியில் இன்று மாலை நடைபெறும் போட்டியில் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி, இணை ஜப்பான் இணையை எதிர்கொள்கிறது.

*புதுச்சேரி-மழை*

புதுச்சேரியில் நேற்று இரவு முதல் அவ்வப்போது பெய்து வரும் மழையின் காரணமாக முக்கிய நீர்பிடிப்பு பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அதன் ஒரு பகுதியாக உப்பானாறு கால்வாய் அமைந்துள்ள மறைமலை அடிகள் சாலை, மற்றும் காமராஜர் சாலை சந்திக்கும் இடங்களை பார்வையிட்டு மழை நீர் தேங்காத வகையிலும் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் மழை நீர் வடிய நடவடிக்கை எடுக்க பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் கொம்பந்த மேடு படுகை அணை, ஆராய்ச்சிக் குப்பம் மற்றும் சித்தேரி ஆகிய பகுதிகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் இருகரைகளையும் 1 மீட்டருக்கு மேல் உயர்த்தி பலப்படுத்தும் படியும் தேவையான மணல் மூட்டைகள் கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மழைக் காலம் என்பதால் பொது மக்கள் அதிகம் வரும் இடமான ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேவையான அனைத்து மருந்து மாத்திரைகள் வைத்திருக்கவும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் 24 மணி நேரமும் பணியில் இருக்கவும் வலியுறுத்தினார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பாதுகாப்பு தளவாட உற்பத்தி மையமாக இந்தியா மேம்பட்டுள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மின்னணு பொருட்களின் விற்பனை வழக்கத்தை விட அதிகரித்திருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற்ற மக்கள் மன்ற குறை தீர்ப்புக் கூட்டத்தில் காவல் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு பொது மக்களிடம் புகார் மனுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதால், புதுச்சேரி காரைக்கால் பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------